ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

दग्धं खाण्डवमर्जुनेन बलिना व्याप्तं तरक्ष्वादिभिः
दग्ध्वा वायुसुतेन रावणपुरी लङ्का कुमत्यावृता ।
दग्धस्तीक्ष्णशरो हरेण मदनो दग्धं पुराणां त्रयं
दारिद्र्यं बहुदुःखदं भुविनृणां दग्धं न केनाप्यसौ ॥

பலவானான அர்ஜுனனால் புலி முதலிய கொடியமிருகங்கள் நிறைந்த காண்டவவனம் தஹிக்கப்பட்டது. எப்பொழுதும் உலகங்களுக்கு அபகாரத்தைச் செய்துவந்த ராக்ஷஸர்களுக்கு இருப்பிடமான லங்காபுரியும் வாயுகுமாரனான அனுமானால் தஹிக்கப்பட்டது. மிகவும் தீக்ஷ்ணமான பாணத்தையுடைய மன்மதனும் ஸ்ரீபரமேசுவரனால் தஹிக்கப்பட்டான். திரிபுரர்கள் என்னும் அரக்கர்களும் இவராலே தஹிக்கப்பட்டார்கள். ஆனால் இவ்வுலகில் மானிடர்களுக்கு அதிக துக்கத்தை விளைவிக்கக்கூடிய தாரித்திரியமானது ஒருவராலும் தஹிக்கப்படவில்லை.

உலகக்ஷேமத்தையே பெரிதாய்க்கருதிய சில மஹான்கள் சிற்சில காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அதாவது பஞ்சபாண்டவரிலொருவனான விஜயன் மனிதர்களுக்கு விசேஷ ஹிம்ஸை கொடுக்கும் புலி, சிங்கம் முதலிய துஷ்டமிருகங்களுக்கு வாஸஸ்தானமான காண்டவ வனத்தைத் தஹித்து அந்த மிருகங்களைக்கொன்று அந்த ஹிம்ஸையை விலக்கினார். அனுமார் மூவுலகிற்கும் கஷ்டத்தையுண்டுபண்ணின ராவணன் முதலான ராக்ஷஸர்களுக்கிருப்பிடமான லங்கையை தஹித்து அதையும் நிவிருத்தி செய்தார். இவ்விதமே பரமேசுவரனும் திரிபுரர் என்ற அஸுரர்கள் மன்மதன் இவர்களாலேற்பட்ட கஷ்டங்களை நீக்கினார். இவைகளைக் காட்டிலும் ஜனங்களுக்கு அதிக கஷ்டங்களைக்கொடுக்கும் தாரித்திரியத்தை நாசம்செய்ய ஒருமஹானாகிலும் எற்படவில்லையென்று எழ்மை ஸ்திதியிலிருக்கும் ஒருவர் வருந்துகிறார். இதனால் தனக்கு பகவானால் கொடுக்கப்பட்டிருக்கும் பொருளைக் கெட்டவழிகளில் செலவிட்டு கஷ்டப்படாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று தெரிகிறது.

நமது தர்மம்.

19. அர்த்தசாஸ்திரம் என்பதென்ன ?

பிரஜைகளைப்பரிபாலிக்கவேண்டிய நீதிகளும் ராஜ்யத்தை ரக்ஷிக்கவேண்டிய தந்திரங்களும் தர்மத்திற்கு ஸாதனமான பலவிதபொருள்களைத்தேடும் மார்க்கங்களும், நகரங்கள் ஆலயங்கள் அரண்கள் பாலங்கள், முதலியவைகளை நிருமிப்பதற்குரிய சிற்பங்களும் ராஜாங்கத்துக்குரிய கஜம், அசுவம், நவரத்னம் முதலியவைகளின் லக்ஷணங்களும் அடங்கிய சாஸ்திரத்திற்கு அர்த்தசாஸ்திரம் எனப்பெயர். இதன் ஒவ்வொரு பாகங்களும் பற்பலரிஷிகளால்உபதேசிக்கப்பட்டிருக்கின்றன.

20. வேதத்தின் அங்கங்கள் எவை ?

சிக்ஷை கல்ப்ஸூத்ரம், வியாகரணம், நிருக்தம், ஜ்யோதிஷம், சந்தஸ்ஸு, என்று ஆறு அங்கங்கள்.

21. சிக்ஷை என்பது யாது ?

வேதங்களைப்பிசகாய் ப்ரயோகித்தால் கத்தியைப்போல் பிரயோகிப்பவனையே அழிக்குமாதலின், அதனை சரியாய் உச்சரிப்பதற்கு மூலபூதமான அக்ஷரங்களின் உத்பத்திஸ்தானம் வெளிப்பிரயத்தினம் உள்பிரயத்தினம் ஸ்வரபேதம் முதலியவைகளை சிக்ஷிக்கும் (கற்பிக்கும்)நூலுக்கு சிக்ஷை எனப்பெயர். பாணினி முதலிய அநேக முனிவர்கள் இதனை யியற்றியிருக்கிறார்கள்.

22. கல்பஸூத்ரம் என்பது யாது ?

நம்மால் கடமையாய்ச் செய்யப் படவேண்டியவைகளும் செய்யாவிடின் தோஷத்திற்கு ஹேதுவான நாற்பது ஸம்ஸ்காரங்களையும் கூறப்பட்டுள்ளனவுமான வேதத்தினுல் மற்றும் சில விசேஷகர்மாக்களையும் செய்யும் விதத்தை பிரித்துக்கூறும் ஸூத்ரமே கல்பம் எனப்படும். இது ஆசுவலாயனர், ஆபஸ்தம்பர், போதாயனர், த்ராஹ்பாணர், ஸத்யாஷாடர், பாரத்வாஜர் முதலிய ரிஷிகளால் பிரத்யேகமாய் செய்யப்பட்டிருக்கிறது.

23. வியாகரணம் என்பது எது ?

வேதங்களில் உள்ள சப்தங்களுக்கும் மற்றுமுள்ள ஸம்ஸ்கிருதசப்தங்களுக்கும் இலக்கணங்களைக் கூறும் சாஸ்திரம் வியாகரணமாம். நடராஜாவால் அநுக்ரஹிக்கப்பட்டு பாணிநி முனிவராலியற்றப்பட்டது.

24. நிருக்தம் என்பதென்ன ?

வேதங்களிலுள்ள சப்தங்களின்பொருளையறிவிக்கும் நூல். இது யாஸ்கமுனிவரால் செய்யப்பட்டது.

25. சந்தஸ் என்பது யாது ?

வேதமந்திரங்களிலுள்ள காயத்திரி முதலான அக்ஷரபதங்களின் பெயரையும், அவை யொவ்வொன்றுகளித்தனையென்றும் போதிக்கும் சாஸ்திரம். இது பிங்கள முனிவரால் இயற்றப்பட்டது

26. ஜ்யோதிஷம் என்பது யாது ?

வேதங்களில் விதித்துள்ள கர்மங்களைச் செய்வதற்குரிய காலவிசேஷங்களையும் கிரஹணம் முதலிய புண்யகாலங்களையும் கணித்து அறியக்கூடிய சாஸ்திரமே ஜ்யோதிஷம் எனப்படும். இதற்கு ஸௌரம், வாஸிஷ்டம், பைதாமஹம், ரோமகம்,பௌலிசம், ஆகிய ஐந்தும் முதநூல்களாம். இந்த ஒவ்வொரு முதநூல்களும் கணிதஸ்கந்தம், ஹோராஸ்கந்தம், ஸம்ஹிதாஸ்கந்தம் என மூன்றுஸ்கந்தங்களடங்கியன. கணிதஸ்கந்தமென்பது, எல்லாவிதமான கணக்குகளையும்பற்றிக் கூறுகின்றது.

இது ✲1. வ்யக்தகணிதம், 2 அவ்யக்த கணிதம், 3. க்ஷேத்ர கணிதம், 4. ரேகா கணிதம இவைகளடங்கிய கணிதாத்யாய மும், பூகோளம், ககோளம் இவைகளடங்கிய கோளாத்யாய முமாக இரண்டு அத்தியாயங்களோடு கூடியது. பிற்காலத் தில் ஸம்பவிக்கக்கூடிய விஷயங்களை முன்னரே கிரஹங்களு டைய நிலைகளை கணிதத்தால் அறிந்து தீர்மானிக்கும் விதத் தைக்கூறுகின்றது. ஸம்ஹிதாஸ்கந்த மென்பது உலகத்தின் பொதுவான சுபா சுபங்களை தூமகேதுக்கள் முதலான அநேக விதமான விசேஷ நிமித்தங்களைக்கொண்டு தீர்மானிக்கின்றது.

27, வேதத்திற்கு உபாங்கங்கள் எவை?

புராணம், நியாயசாஸ்திரம், மீமாம்ஸை, தர்மசாஸ்திரம், என்னும் நான்குமாம்.

28. புராணம் எத்தனை அவைகளின் பெயர், என்ன?

புராணங்கள் பதினெட்டு, அவற்றில் பிராம்மம் என்பது 10000 கிரந்தங்கள் கொண்டது, பாத்மம் 55000 கிரந்தம். வைஷ்ணவம் 23000 கிரந்தம், சைவம் 24000, பாகவதம் 18000, நாரதீயம் 25000 மார்க்கண்டேயம் 6000, அக்நே யம் 15400, பவிஷ்பம் 145000, பிரம்மவைவர்த்தம் 18000, லிங்கம் 11000, வராஹம் 24000, ஸ்காந்தம் 811000, வாமநம் 10000, கௌர்மம் 17000, மாத்ஸ்யம் 14000, காருடம் 19000, ப்ரும்மாண்டம் 12000, எனப்பதினெண் புராணங்களும் சே ர்ந்து நான்கு லக்ஷம்கிரந்தங்கள். லக்ஷம்கிரந்தங்களுள்ள மஹா பாரதமும் 24000 கிரந்தங்களடங்கியராமாயணமும் இதிஹாஸ ங்களில் சேர்ந்தவை. இவைகளெல்லாம் வேதார்த்தங்களைத் தெள்ளெனவிளக்கும் பிரமாண நூல்களாம். ஒருகிரந்தமென்பது முப்பத்திரண்டு அக்ஷரங்களடங்கிய ஒரு சுலோகத்திற்குப் பெ யர். புராணங்களை விரித்துக்கூறியவர் வியாஸமுநிவர். இப் பதினெட்டு புராணங்களுக்கும் பதினெட்டு உபபுராணங்கள் ஏற்பட்டுள்ளன.

(இன்னும் வரும்)

✲ 1. Arithmetic 2. Algebra 3. Mensuration 4 Geometry. 5. Geography. 6. Astrology. 7. Astronomy.

இந்துமதத்தின் பெருமையை விளக்கும்
சிற்சில திருஷ்டாந்தங்கள்.

(௨௧௬வது பக்கத்தொடர்ச்சி)

உண்மையில் ஆராய்ந்து பார்க்குமிடத்து, பைபிளிலுள்ள அச் சுவிசேஷங்கள் ஆதிகாலத்து வித்வான்களால், பற்பல இந்து புராணங்களைக்கேட்டு அவற்றிலுள்ள பலவிஷயங்களைக் கிரகித்தும், தங்கள் புத்திவிசேஷத்தால் ஆங்காங்கு சிறிது சிறிது சேர்த்தும், எழுதப்பட்டிருக்கவேண்டுமென்பதற்கு, பலத்த ஆதாரங்கள் பலவிருக்கின்றன. அஃதெங்ஙனமெனில், மாத்ஸ்யம் முதலில் கூறியிருக்கும் அவாந்திரப் பிரளயத்தையும், வைவஸ்வத மனுவை மஹாவிஷ்ணு காத்தவழியையும் கேட்டு எறக்குறைய, அதுபோலவே "நோவா" வின் சரித்திரம் வரையப்பட்டிருக்கின்றதென்னலாம். ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள ஸ்ரீ கிருஷ்ணசரித்திரத்தின் முதற்பாகத்தையெடுத்து 'ஸ்ரீ" என்பதற்கு "ஜீஸஸ்" (Jesus) என்றும் 'கிருஷ்ணன்" என்பதற்கு "கிருஸ்டு" Christ) என்றும், அவர் மாடுகளை மேய்த்தாரென்பதை இவர் ஆடுகளை மேய்த்தாரென்றும், அவர் வியாதரால் அடிபட்டும் ஈசுவரத்தன்மையால் தாருவாயெழுந்தருளியிருக்கின்றாரென்பதை இவர் யூதரால் அடிபட்டு தாருவிலறையப்பட்டாரென்றும் அக்கதையை மாற்றியுருத்தெரியாமலெழுதப்பட்டிருக்கின்றது. இத்தகைய கிருஸ்துவென்பாரொருவர் இருந்ததேயில்லையென்பது மேனாட்டுப் பிரபல பண்டிதர்களான சிலர்களின் அபிப்பிராயம் (இது ஆங்கிலத்தில் "Jesus Christ, a myth" என்று சொல்லப்படும்). அன்றியும் அப்பைபிளில் கூறப்பட்டுள்ள கடவுள் இந்திரனெனப் புலப்படுகின்றது. அவருக்கு வாகனம் மேகமெனவும் குறி வானவில்லெனவும் கூறப்படுவது முதற் பிரமாணம். நாம் மேகவாகனனென்று இந்திரனையும் இந்திரதனுவென்று வானவில்லையும் கூறுவது வழக்கமாதலினென்க. இரண்டாவது பிரமாணம் கூறுகின்றோம். அப்மதத்திலீடுபட்டவரும், மகாகவிகளால் புகழப்பெற்றவரும், ஈடற்ற

கவியுமான "மில்டன்" (Milton) என்பவர் தன் கிருதியில் (Paradise Lost), சாத்தான் (ஆங்கிலத்தில் Satan என்பது முந்திச் சுவர்க்கத்தையாண்டு கொண்டிருந்ததாகவும் விதியினுல் தன்னையிப்பொழுது வந்த "ஜிஹோவா" (Jove) என்பவன் தள்ளிவிட்டதாயும், தனக்கும் இவ்வரவுருவிருந்து நரகத்தில் வருந்துவதாயும் புலம்பும் வழிகளை நன்கு விவரித்துக்காட்டியுள்ளார் அதனுல் இந்திரப்பதிவியிலிருந்து அகஸ்தியமுனிவரது சாபத்தால் வந்துவிழுந்த நஹுஷராஜன் தான் இவனெனவும், நஹுஷனுக்கடுத்த விந்திரன்றான் இவர்கள் தேவனெனவும் தெரிய வருகின்றது. அதுமுதற்கொண்டுதான் மேநாட்டில் "அரவமாகின்ற" என்று பொருள்படும் மொழியை "அரவம்" என்பதற்குபதிலாயுபயோகித்து வருகின்றார்களென்பதை வடமொழியிலுள்ள सर्पम् என்னும் பதத்தையும், ஆங்கிலத்திலுள்ள (ஸர்பெண்ட்) Serpent என்ற மொழியின் மூலகாரணங்களையும் (Fr, and Pr. Serpent, It. Serpente, Sp Serpiente, Lat Serpens, Serpentis (Sepestia), Fr. Serpens. p. pr of Serpere) கவனித்தால், நன்குவிளங்கும். அகஸ்திய முனிவருடைய சாபமும் (ஸர்ப, ஸர்ப) सर्प, सर्प என்னும் இந்த மொழியைக் கொண்டே "செல்" "அரவமாய் விடு" என்று பொருள்படுகின்றது. இதற்கு மற்றோர் காரணமும் கூறலாம். வடமொழியில் "ஸ"காரத்திற்கு 'ஹ' காரமும் 'ஹ' காரத்திற்கு "ஸகாரமுமாயெழுத்து மாற்றிக்கொண்டு, மேநாட்டுப்பாஷைகளில் பலவேறுபதங்கள் உண்டாயின. (San Hiran, Per. Zeran, S. Ahi, P. Aqi, S. Ahem, P. Azem, S. Hemata, P. Zemata, S. Mahath, P. Mazda, S. Azura P. Ahura,) அதுகொண்டு அவர்கள் கடவுளுக்கு மூலாகமத்தின் (Zend a Vesta) பிரகாரமாய் (Ahura-Mazda) என்று பெயர் கூறப்பட்டிருக்கின்றது. இது असुर महत (அஸுரமஹத்) என்ற வடமொழியின் பதம். அதனுல் பெரியவசுரன் என்று கூறப்படுகின்றது. அதுவுமன்றி தேசத்தின் பெயராகிய "அசூரியா" (Asyria) என்பதும் அசுரர்களைச் சேர்ந்ததெனும் பொருள் தரத்தக்க असुरिया (அஸு

ரியா) என்னும் வடமொழியை யனுஸரித்ததேயாகும். அசுரர்களுக்குப் பூர்வதேவர்களென்று வடமொழியில்,

पूर्वदेवास्सुरद्विषः [பூர்வதேவாஸ்ஸுரத்விஷஃ]

என்றிருப்பதினால் தேவத்வேஷிகளென்று புலப்படுகின்றது. அன்றியும் ஹீப்ரு பாஷையில் சாத்தானென்னும் சொல் சாத்தானென்றர்த்தமுடையது. அது ஆங்கில கவிச்ரேஷ்டரான "மில்டன்" (Milton) இன்("To whom the Arch-enemy and hence in heven called Satan" paradise lost Book I) என்ற வசனங்களால் நன்கு வெளிப்படையாகத் தெரிகின்றது ஆகவே, தேவத்வேஷத்தாலும், பிராமணத்வேஷத்தாலும் அரவமாய்ப்போன அந்நஹுஷன்தான் சாத்தான் என்பது திண்ணம். சுருக்கிச்சொல்லுங்கால், "பைபில்," புராதன நம்மிந்துக்களுடைய தேவனான இந்திரனை, தங்களதாகச்செய்துகொண்டு அதன்படி போற்றிவரும் ஓர்ஜாதியாரின் பூர்வசரித்திரமென்று புலப்படுகின்றது.

புராதனமான இந்து மதத்தின் பெருமை இம்மாத்திரமோ? ஆதிகாலந்துடங்கி நமது இந்துமக்கள் பூஜித்துவரும் இவ்வேதமே ஜடம், ஜீவன், ஈசுவரன், என்னு மிம்மூன்றிலக்கணங்களையும், அவற்றினுண்மையான நிலைமையையும் நன்கு தெரிவிக்கின்றது. அறம் பொருள் இன்பம் வீடென்னும் நால்வகைப்புருஷார்த்தங்களைப்பெறும் மார்க்கத்தையும், தெளிவுறத்துலக்குகின்றது. கிறஸ்தவ வேதமென்று சொல்லக்கூடிய பைபிலோ (Bible) வெனில், அனேக உயர்ந்த மதக்கோட்பாடுகளடங்கியுள்ளதெனினும், அது, ஜடமிஃது, ஜீவனிவன், ஈசுவரனிவன் என்று இம்மூன்றிலக்கணங்களையும் நன்குணர்த்தவில்லை; புருஷார்த்தங்களும் நன்கு கூறப்பட்டிருக்கின்றதாகக் காணப்படவில்லை. கூறியுள்ள வரையிலும் கூட நமது பிரமாணங்களுக்கு மாத்திரமன்று, ஆங்கில நிபுணர்களான அன்னோர்களுடைய கொள்கைகளுக்குங்கூட ஒற்று வாவில்லையே? மேநாட்டு வானசாஸ்திரிகளும், பரிணமவாதிகளும் (Astrono-

mers and Evoludonists) சூரியனுண்டாகி எவ்வளவோ ஆயிரம்வருடங்களுக்குப்பின்னர் பூமியின் முதலுருவுண்டாயிற்றென்றும், பின்பு எவ்வளவோ வருடங்களுக்குப்பின் புற்பூண்டுகள் மிருகபக்ஷிகள் தோன்றினவென்றும், அதற்கும்பலாண்டுகட்கப்பால் மனிதராயினவென்றும் கூறி வருகின்றனரே. ('Our ancestor was a hairy quadruped pointed in his ears and probably arboveal in his habits'- Darwin) அவர் பைபிலோ ஆறுநாட்களிலேயே சர்வ சிருஷ்டியும் செய்துவிட்டது. இதில் கூறப்பட்டிருக்கும் நாட்களை இந்தியாரப்பர் போலிழுத்தவரையிலிழுப்போமெனினும், முற்கூறிய அவர்கள் சாஸ்திரம் இப்பொழுதிருக்கும் நாட்களுக்கு, முன்னிருந்த நாட்கள் மணிக்குறைவுடையனவாயிருந்தன வென்று சொல்கின்றதே. இதுவுமன்றி கடவுள் சிருஷ்டியில், சாத்தான் (Satan) சொல்லப்படவில்லை யாதலின் அது கடவுளுடன்கூட முன்னர்தானேயுள்ளதாவென்றும், அல்லது தேவனுலும் அறிதற்கொண்ணு ஓர் பைசாசந்தானுவென்றும், இவ்விரண்டுமில்லாவிடின் அது எத்தகையதென்றும் நன்கு விளங்கவில்லை. அக்கடவுள் "ஞானவிருக்ஷ"த்தின் (Tree of knowledge)கனியைத்தின்றுவிட்ட 'ஆதா" (Adam)விடத்திலும் "ஏவாளி" (Eve) டத்திலும் கோபித்துக்கொண்டு சாபமீய்ந்ததும், அவர்களுக்கு ஞானமிருக்ககூடாதென்று அபிப்பிராயங்கொண்டிருந்ததுமாக வெழுதிய பைபலாசிரியரின் நோக்கம் விவேகிகள் நம்பத்தகாததாக விருக்கின்றது. ஆனதுபற்றியே, ஞானமிருக்க வொண்ணுதென்றெழுதி யிருக்கிறார்களெனத் தோற்றுகின்றது. அந்தப்பைபிலும் முதன்முதலில் ஹீப்ருபாஷையிலெழுதப்பட்டதாகவும், அது இப்பொழுதெங்கோ மறைந்துபோய்விட்டதென்றும், இப்பொழுதிருக்கும் பைபிலிலும், சிலர் முற்பாகம் (Old Testament) பிரமாணமன்றென்றும், பிற்பாகமே (New Testament) பிரமாணமெனவும் கூறுகின்றனர். நம்முடைய அநாதியான இந்துக்களின் வேதமோ, இம்மாதிரி சந்தேகங்களுக்கிடமின்றி வெகுகாலமாக ஒரே

விதமாய் நம் இந்து ஜனங்களால் போற்றப்பெற்றுவருகின்றது. பிற்காலங்களில் அவைகளுக்கு, விவரணங்கள், அநேக நிபுணர்களால் பலமாதிரியா யெழுதப்பட்டபோதிலும், நம்ஜனங்கள் மூலமாகிய வேதமந்திரங்களை, முற்பாகம் பிரமாணம், பிற்பாகம் அப்பிரமாணம் என்கிற வேற்றுமையன்றி மனப்பாடம் செய்து பூஜித்து வருகின்றனரென்பதே நமது வேதத்தின் பெருமைக்குத்தகுந்த அத்தாட்சி.

இவ்வாறு அனாதி காலந்தொடங்கி இந்து ஜனங்களால் கொண்டாடப்பட்டுவருவதும், உலகத்தில் முதன் முதல் நாகரீகத்தில் மேம்பாடடைந்ததெனச் சொல்லக் கூடியதுமான எகிப்து பாபிலோனியா கிரீஸ் முதலிய தேயங்களுக்கு தன் மதக்கோட்பாடுகளை யளித்து உதவியதும், அதன் பின்னர் பைபிலாசிரியர்களாலும் கிரகித்துக்கொள்ளப்பட்ட பலகொள்கைகளையுடையதும், ஒப்புயர்வற்றதுமான நம் வேதங்களையும் சாஸ்திர புராணங்களையும், சிலர், அவைகள் தங்கள் சிற்றறிவுக் கெட்டாத கால நிர்ணயத்தையுடைதென்ற காரணத்தால், அவைகள் நம்பத்தகாதென்றும் பிற்பாடு அன்னியமதக்கொள்கைகளை தன்னுடையதாகச் செய்துகொண்டு எழுதப்பட்டனவென்றும் சாதிக்க முயல்வது என்ன பேதமை; பின்னர் தோன்றிய மதங்களெல்லாம் இதன் கோட்பாடுகளில் சிலவற்றையெடுத்துக்கொண்டு மிகவும் பிரகாசிக்கின்றன வென்றால் புராதனமான நம் இந்துமதத்தின் பெருமையை எவ்வாறு கூற முடியும்? அன்றியும், பைபில் முதலிய தத்தம் வேதங்களை யாதியாகவுடைய அநேகமதங்கள், அந்தந்த வழியாகக் கடவுளின் ஸ்வரூபத்தை யெடுத்துரைத்து, மோக்ஷமடையும் ஸாதனங்களை போதிக்கின்றனவெனினும், மகான் ஸ்வாமிவிவேகானந்தஸ்வாமிகளவர்கள் அமெரிகா(America)வில்நடைபெற்ற எல்லா மதங்களின் மகாநாட்டில் (Congress of all Religious) கூறியவாறு, (வேதத்தை மர்மஸ்தானமாகவுடைய) இந்துமதமே வெகுதெளிவாகவும் எளிதாகவும் ஈச்வரஸ்வரூபத்

தை நிரூபணஞ்செய்வதுடன் மோக்ஷமார்க்கத்தையும் நன்கு புகட்டுகின்றதென்பது திண்ணம். ஆதலின், இத்தகைய பெருமை வாய்ந்த இந்துமதக்கொள்கைகளை செவ்வனே யனுஷ்டித்து, எப்பொழுதும் பரலோகஸாதனத்தையே (Spritual interest) பெரிதெனக்கருதியுழைத்த பாரதநாட்டின் புதல்வர்களாகிய நாமும் அவ்வழியே பின்பற்றி நடந்து "முக்தி" யெனும் அரிய பெரிய பதவிக்குப்பாத்திரர்களாவோமாக.

இங்ஙனம்,

இந்து மதாபிமானி.

குறிப்பு:— இவ்வியாஸத்தில் பலஆங்கில நிபுணர்களின் பெயர்களும், அவர்களுடைய அபிப்பிராயங்களும் எழுதப்பட்டிருக்கும் காரணம்பற்றி, இதை வாசிக்கும், நமது ஆர்யதர்ம சகோதரர்கள் பலர், பழமையான இந்துமதத்தின் பெருமையை நாம் நமது அன்னோர்களான கீர்வாண ஆசிரிய நிபுணர்களிடமிருந்து தெரிந்துகொள்ளாமல், மேனாட்டு ஆசிரியர்களிடமிருந்தா அறிந்துகொண்டோம், என்று சந்தேகிப்பது இயல்பே. ஆயினும், இத்தகைய மதத்தின் பெருமையானது, இதற்கு முன்னர், நமது "ஆர்யதர்ம"த்தில் பல வித்வத் சிரோமணிகளால் நமது முன்னோர்களின் வசனங்களைக்கொண்டு நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளபடியாலும், ஆங்கில நிபுணர்களின் வசனங்கள் தற்கால கல்விமுறையில் தேர்ச்சி பெற்றிருக்கும் பலருக்கு திருப்திகரமாயிருக்குமெனும் காரணத்தாலும், நாம் இவ்வாறு எழுதத்துணிந்தனம்.

இங்ஙனம்,

இந்து மதாபிமானி,

ஆசாரியனும் தேவனும்.

(௨௨௦-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்விதம் மதாசார்யர்களாக உலகில் ஈசனே அவதாரமாகிறானென்பதும் சொல்லாமலே விளங்கிற்று. அது கொண்டுதான் வேதம் ஆசாரியரை தெய்வமாய் எண்ணு என்று உபதேசித்தது. ஆகவே ஆசார்யர்தான் தெய்வம். தெய்வந்தான் ஆசார்யர் என்று ஏற்பட்டது. இதையே மனதில் நன்றாய் உறுதி செய்து கொண்டு நம் முன்னோர்கள் இரண்டிற்கும் பேதமின்றிப்பார்த்துவந்தார்கள். அப்படிப்பார்ப்பது அவர்கள் என்ன செய்தார்களென்பதைக் கவனித்தால் ஈசனுக்கும் ஆசார்யருக்கும் பேதமின்றி தன் சுச்ரூஷையைச் செய்திருக்கிறார்கள். அதெவ்விதமெனில் ஈசனின் குணமே ஆசார்யருக்கிருக்கிறது. ஈசனுக்கு நாம் கொடுக்கவேண்டியது யாதொன்றுமில்லை. ஏனெனில் அவர் விளையாட்டாய் சிருஷ்டித்துக் கொடுத்த பதார்த்தத்தையே நாம் பெரிதாகக் கைப்பற்றி சந்தோஷமடைகிறோம். இதைப்போல் எத்தனை மடங்கோ பெரிது பெரிதாய் சிருஷ்டிக்க ஈசன் வல்லவன். அப்போது. நாம் கொடுக்கும் பதார்த்தம் அவனின்றி வரவில்லையென்பது திண்ணம். அப்படியிருக்க நம் பதார்த்தத்தால் அவன் சுந்தோஷமடைவானென்றால் அடைவான். எவ்விதமெனின் இதை ஒரு திருஷ்டாந்தத்தால் விளக்குவாம். நாம் வீட்டில் நமது அருமைக்குழந்தைக்காக அனேக பொம்மைகளையும் பதார்த்தங்களையும் வாங்கிக்கொடுக்கிறோம். அதனால் நமக்குப் பிரயோஜனமே இல்லை. அக்குழவி அதை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு விளையாடுவதல்லாமல் அது சமயல் செய்வதாயும் அப்பாவையும் அம்மாவையும் சாப்பிடச்சொல்லி வற்புறுத்தும்போது தாய்தந்தையர் அதை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு சாப்பிடுவதுபோல் நடித்து அதன் சந்தோஷத்

தையே முக்கியமாய் எண்ணி அதனை சந்தோஷப் படுத்துவதை நாம் அனுபவிக்கிறோம். அதுபோல் பகவான் குழந்தையான நமக்குக்கொடுத்த பொம்மைபோன்ற இவ்வற்ப உலகவாழ்வென்ற பதார்த்தத்தைப் பெரிதாகவெண்ணி விளையாடினும் நம் தாய் தந்தையரான பார்வதீ பரமேசுவரனை முழுமனதுடனழைத்து நாம் அனுபவிக்கும் முன் அவர்களுக்கும் கொடுத்தால் அவர்கள் பரமசந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு இன்னும் விரும்பக்கூடிய பரமசுகத்தை நமக்குக் கொடுப்பாரென்ற எண்ணம் நம் முன்னோர்களுக்கு முதிர்ந்திருந்தது.

இம்முதிர்ஞானத்தால் ஆசார்யர்களைப் பேசும் தெய்வமென்றும் நடக்கும் தெய்வமென்றும் கண்டுகொண்டு அவ்விதமே அவர்களுக்கும் மரியாதை செய்தார்கள். ஆசார்யர் நடக்கும் தெய்வமென்பதிலையமில்லை. அதுகொண்டே,

द्वे मूर्ते वासुदेवस्य चरं चाचरमेव च ।
चरं सन्यासिनां रूपमचरं प्रतिमादिकम् ॥

வாஸுதேவனுக்கு அசையும் சரீரமென்றும் அசையாச்சரீரமென்றிரண்டுண்டு. ஸன்னியாஸி ரூபத்துடன் உலகில் சஞ்சரிப்பது தான் அவரது அசையும்சரீரம். பிம்பம் முதலிய அசையாச் சரீரமென்றார். அவ்விதமே,

यतिर्यस्य गृहेभुङ्क्ते तस्य भुङ्क्ते हरिःस्वयं ।
हरिर्यस्य गृहे भुङ्क्ते तस्यभुङ्क्ते जगत्त्रयम् ॥

ஸன்யாஸி எந்த கிருகத்தில் பிக்ஷை செய்கின்றனரோ அந்த கிருகத்தில் ஹரியானவர் புசிக்கின்றார்.

ஹரி எந்த கிரகத்தில் புசிக்கிறாரோ அங்குமூவுலகும் புசிக்கின்றதென்றார் தர்மசாஸ்திரக்காரர். ஆகவே ஓர்யதிக்கு உபசரித்து அன்னமிட்டால் மூவுலகும் க்ஷேமமடையும் என்பது கருத்து. இவ்விதம் எண்ணின நம்பெரியோர்கள் என்ன செய்

தாரெனில் அசையும் மூர்த்திகளைக்கண்டதும் தனக்கு ஈசனளித்தபொருள் அவனுடையதுதானென்ற எண்ணத்துடன் அதை மனதாற் ஸமர்ப்பணம் செய்வதனிமித்தம் அவர்களிடத்து வெகுநாள்காத்திருந்து ஸமர்ப்பணம் செய்வானேன் என்றால் இங்கு கவனிக்கத்தக்கது இது. பிம்பம் முதலிய தெய்வங்களை உத்தேசித்து நாம் நமது பொருளை ஸமர்ப்பணம் செய்தால் அது வாய் திறவாதசாமியாதலால் வேண்டும் வேண்டாமென்றென்றும் சொல்லாது. அப்போது நாம் ஸமர்ப்பணம் செய்து விட்டு வந்து விடலாம். இப்பேசும் சாமி அப்படியல்ல இவர்கள் உலகத்தையே துறந்தவர்கள். அத்தகையோரிடம் உலகில் ஓர் மூலையில் கண்ணுக்குத் தெரியாத நாற்றமுள்ள நம் பதார்த்தத்தை நாம் பெரிதென்றெண்ணியபோதிலும் அவர்களதை பந்தமென்றும் பரலோக பாதகமென்றுமே எண்ணி வெறுப்பார்கள். அதைக்கொண்டோலமிட்டு ஓடுவார்கள். இத்தகைய வெறுப்புக்கொண்ட நம்மாசார்யர்களை நம் யானை குதிரைகளாலும் அன்னபானாதிகளாலுமா சந்தோஷப்படுத்தமுடியும். ஒருக்காலுமில்லை. அத்தகைய மகான்களுக்குத்தான் நம்முன் அரசர்கள் யானை குதிரை படைகள் பல்லக்கு ஆலவட்டம் கொடை சுருட்டி வாத்தியமுழக்கம் முதலியவற்றையெல்லாம் கஷ்டப்பட்டு ஸமர்ப்பித்தனர். ஏன் ஸமர்ப்பித்தனர் எதற்காகவென்றால் நம் தைத்தரியத்தில் சிக்ஷாவல்லியிலிருக்கும் ஒரு வாக்கியத்தை நம்பினார்கள். அங்கு "ஆசார்யருக்குப் பிரியமான தனத்தைக் கொடுத்துக்கொண்டு உன் ஸந்ததியைக் கெடுத்துக்கொள்ளாமல் க்ஷேமமாய் இரு" என்கிறது இதன் கருத்து. ஆசார்யருக்குப் பிரியமான தனத்தைக்கொடு. உன் வம்சத்தை அதன்மூலம் வளரச்செய்என்பதே. இன்னொன்று இங்கு கவனிக்கவேண்டும்.

श्रोत्रियो ब्रह्मनिष्ठो यःप्रशान्तस्समदर्शनः ।
निर्भयो निरहङ्कारी निर्द्वन्द्वो निष्परिग्रहः ॥

अनपेक्षश्शुचिर्दक्षः करुणामृतसागरः ।
एवं लक्षणसंपन्नः स गुरुर्ब्रह्मवित्तमः ॥
उपसाद्यः प्रयत्नेन जिज्ञासोः स्वार्थसिद्धये ॥

வேதம் கற்றவரும், பிர்ம்நிஷ்டை பெற்றவரும், மிகச்சாந்தியுள்ளவரும், எல்லாவற்றையும் ஸமமாய்ப்பார்க்கக்கூடியவரும், மமதையற்றவரும், அஹங்காரத்தை விட்டவரும், இரண்டற்றவரும், ஸங்கமற்றவரும், விருப்பமற்றவரும், சுத்தமானவரும், சுருசுருப்புள்ளவரும், கருணையென்னும் அமிர்தத்திற்குக் கடலுமான இத்தகைய லக்ஷணமுள்ளவர் எவரோ அவர் குரு அவர்தான் நன்கு பிர்மநிஷ்டரெனப்படுவார். இத்தகையோரை அறிந்து முயற்சியோடு ஆன்மஞானத்திற்காகப் பற்றவேண்டுமென்றிருக்கிற ஸ்மிருதிவாக்கியப்படி பார்த்தால் "ஆசார்யருக்குப் பிரியமான தனத்தைக்கொடு" என்ற சுருதி வாக்கியம் விரோதிக்கிறதே என்றெண்ணவேண்டாம். சுருதி சொன்னதைத்தான் ஸ்மிருதி சொல்லும். ஆனால், இங்கு சுருதியினர்த்தம் முன் சொன்னதன்று. அதன் ரஹஸ்யம் இது. "ஆசார்யருக்கு உனக்கு எது மிகப்பிரியமென்று மனதில் படுகிறதோ அதைக்கொடு என்றது இவ்விதம் அர்த்தம் கொண்டால் எல்லாம் விரோதமின்றி முடியும். இவ்வபிப்பிராயத்தையொட்டி தர்மசாஸ்திரத்திலும்,

वस्त्राभरणमाल्यानि शयनान्यासनानि च ।
प्रियाणिचात्मनो यानि तानि देयानि वै गुरोः ॥
तोषयेत्तं प्रयत्नेन मनसा कर्मणा गिरा ॥

வஸ்திரம் ஆபரணம் மாலை படுக்கை ஆஸனம் இன்னும் தனக்கு எவை பிரியமானவையோ அவைகளும் குருவுக்கு அர்ப்பணம் செய்யத்தக்கவை அவரை நடத்தையாலும் வாக்காலும் மனதாலும் ஸந்தோஷப்படுத்தல் வேண்டும் என்றது இதையெல்

லாம் தெரிந்துகொண்ட நம்முன்னோர்கள் தனக்குப்பிரியமான விலையுயர்ந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் பல்லக்கு யானை குதிரைகளையும் மற்றும் தனக்குப்பிரியமான அநேக பதார்த்தங்களையும் அங்கு ஸமர்ப்பணம் செய்தால்தான் நமது வம்சத்திற்கே கீர்த்திபெருகுமென்றெண்ணியே அவ்வாசார்ய மூர்த்திக்கு ஏராளமான பழம்முதலியவைகளை ஸமர்ப்பணம் செய்து தானமாய்க்கொடுத்தார்கள். தானமென்றால் स्वत्व निवृत्तिपूर्वकपरस्वत्वापादनं दानं அதாவது தனது என்று இருந்த பிரியத்தை அதினின்றும் விலக்கி பிறனுடையது என்று எண்ணிக்கொடுப்பது தானம் என்றார். ஆதல்பற்றியே தானம்செய்யும்போது तुभ्यमहं संप्रददे न मम உனக்கு இதைக்கொடுத்து விடுகிறேன் இனி என்னுடையதல்லவென்று சொல்கிறோம். இப்படி குருக்கள் பிரார்த்தியாது கிடைத்தபொருளைப் பற்றில்லாது லோகக்ஷேமார்த்தம் அனுபவித்துக்கொண்டு அவர்கள் காலக்ஷேபம் செய்வார்கள். பற்றில்லாதனுபவித்தல் எவ்விதமென்று ஸந்தேகம் வேண்டாம். ரகுவம்சத்தில் திலீபனைப்பற்றி வர்ணிக்குமிடத்தில் இதைக் காளிதாஸன் காட்டியிருக்கிறான்.

जुगोपात्मानमत्रस्तो भेजे धर्ममनातुरः ।
अगृध्नुराददे सोऽर्थमसक्तस्सुखमन्वभूत् ॥

அவன் தன்னை பயமின்றிக்காப்பாற்றிக்கொண்டான். வியாதியில்லாதவனாய் தர்மத்தை அடைந்தான். ஆசையில்லாமல் பணத்தை சம்பாதித்தான். சம்பந்தமில்லாது சுகத்தை அனுபவித்தான் என்றார். சம்பந்தமில்லாது சுகத்தை அனுபவிப்பதெவ்விதமெனின் ராஜாவுக்கேற்பட்ட மரியாதைப்படி சிலர் சாமரம் வீசுகிறார்கள், சிலர் காலை பிடிக்கலாம் சிலர் இன்னும் பல உபசாரங்களையும் செய்யலாம். அதிலெல்லாம் அவனுக்குப் பிரியமில்லையாயினும் இதை வேண்டாமென்று சொன்னால் அநேகருக்கு வருத்தமுண்டாகலாம் அல்லது ராஜ்யத்தில் அவரவர்களுக் கேற்பட்ட வேலையை நிறுத்துவதால் அவர்களுடைய பிழைப்புப்போய்விடலாம். அப்போது அக்

குடும்பங்கள் நம்மால் பரிதபிக்கநேரிடும். இது நம்மால்வேண்டாம் அவரவர்களுக்கு ஏற்பட்ட வேலையைச்செய்யட்டுமென்று அதில் தான் சம்பந்தப்படாமல் அந்தந்தசுகத்தை அனுபவித்தான் என்றான். அதுபோல் நம்பரமாசார்யர்களும் ஈசனின் வேறுரூபமாதலால் நம்முன்னோர்களும் அரசர்களும் தனக்குப்பிரியமான பல்லக்கு முதலியவைகளைக்கொடுத்து அவர்களைப்பிரியப்படுத்துவோமென்று தனக்குப்பிரியமான உத்தமபதார்த்தங்களையும் ஆடை ஆபரணங்களையும் ஸமர்ப்பித்தால் அதை அவர்களுக்காக ஏற்றுக்கொண்டு அவர்களுக்காக அனுபவிப்பதுபோல் நடிப்பது என்ன குற்றம்? அதுவல்லவா ஈசனின் கருணை.

पत्रं पुष्पं फलं तोयं योमे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृतं अश्नामि प्रयतात्मनः ॥

பத்திரமோ புஷ்பமோ பழமோ ஜலமோ எதை பக்தியோடு எனக்கு ஸமர்ப்பணம் செய்கிறானோ அதை பக்தியோடு கூடியிருப்பதால் மிகத்திருப்தியுள்ளவனாய் சாப்பிடுகிறேனென்றுபகவான் கட்டளையிட்டிருக்கிறார். ஆகவே ஆசார்யனுக்குப் பிரியமான தனத்தைக்கொடுவென்ற சுருதி பொருத்தமுடையதுதான். இத்தகைய குருவுக்கு நாம் ஸமர்ப்பணம் செய்வதால் ஏற்படும் பிரயோசனம் யாதெனில் ஈசனுக்கென்று ஸமர்ப்பணம் செய்வதில் யாது பயனுள்ளதோ, அதுவேதான், ஆதல் பற்றியும் ஈசனுக்கும் ஆசார்யனுக்கும் பேதமில்லையென்றேற்பட்டது இவ்வபிப்பிராயத்தை ஸ்மிருதிகாரரும்

योगुरुस्सशिवःप्रोक्तो यश्शिवः स च शङ्करः ।
शिवविद्यागुरूणां च भेदो नास्ति कथंचन ॥

எவர் குருவோ அவர் சிவன். எவன் சிவனோ அவனே சங்கரன். சிவனுக்கும் வித்யாகுருக்களுக்கும் ஒருவிதத்தாலும் பேதம் காணமுடியாதென்றார். (இன்னும் வரும்.)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரி.